1973 நவம்பர் 21]

திரு. கா. வேழவேந்தன்: ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் வளரவேண்டும் என்கின்ற கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. நியமிக்கவேண்டும் என்று கருதி, இரண்டு ஒன்றியங்களுக்கு ஒரு ஈ.ஓ.ஐ. இருப்பதை மாற்றி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. அதிகாரி நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே 374 ஒன்றியங்களுக்கும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இடையிலே நிறுத்தப்பட்டு, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பரிசீலனை செய்யச் சொல்லி, அது சரியாக வராது என்று சொல்லி, 374, 294 ஆகக் குறைக்கப்பட்டு, அதிலும் பிறகு 60 பேர்களுக்கு வேலை இல்லாமல் வேறு துறைக்கு மாற்றப்பட்டார்கள். ஒவ்வொரு பகுதியிலும் எந்தெந்தப் பகுதியிலே எதை எதை எல்லாம் இணைக்கலாம் என்று இருக்கிறதே தவிர, தனியாக எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

திருச்சிராப்பள்ளியில் பேருந்து நிலையம்

*283 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சிந்தாமணி பஸ் நிலையம் மிகவும் இடநெருக்கடியான இடத்தில் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இப்பொழுது திருச்சிராப்பள்ளியில், திருச்சி சந்திப்பின் பகுதியில் ஒரு பஸ் நிலையம் உள்ளது. சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை என்று கூறினார்கள். செயின்ட் ஜோசஃப் கல்லூரியின் அருகில் இருப்பது சிந்தாமணி பஸ் நிலையம்தான். தற்பொழுது அங்கே இட நெருக்கடி இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, அமைச்சர்

அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, செயின்ட் ஜோஸஃப் கல்லூரி நிர்வாகத்திடமிருந்து கொஞ்சம் இடம் வாங்கி, இதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சிந்தாமணி சாலையில் இருப்பது ஆங்காங்கு உள்ள பஸ் ஸ்டாப்புகள். அங்கே பஸ்கள் நிற்கும், போகும். ஆனால் பஸ் ஸ்டாண்டு அல்ல. ஆனால், இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி சிந்தாமணியில் திருச்சி-கரூர் சாலைக் கருகில் S. No. 539 (part), 538 (part), 537-1 (part), 537-2 (part), Ward No. 5, Block No. 9. எண்ணில் அரசாங்கத்தினால் அக்வையர் செய்யப்பட்டு, அதில் என்ன வேலைகள் செய்யலாம் என்பதைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். அந்த நேரத்தில் அதுவும் கவனிக்கப்படும்.

உதகை நகருக்குப் புதிய பேருந்து நிலையம்

*284 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை நகரத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான வேலை எப்போது தொடங்கப் படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) முறைப்படியானவைகளை அனுசரித்து பின் வேலை துவங்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன் : இந்த வேலைகள் எப்பொழுது துவங்கப் படும், எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த வேலைக்கு ஏற்கனவே ரூ. 3,53,000 செலவில் ஊட்டி நகராட்சியில் ஒரு மத்திய பேருந்து நிலையம் கட்டுவதற்கான கருத்து ஒன்று இருக்கிறது. செலவின் மதிப்பீடு ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக இருப்பதால் கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்களே தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளித்துள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளிகள் கேட்ட போது ஒருவர் மட்டுமே முன் வந்தார். இந்த ஒப்பந்தப் புள்ளித்